
12 செப்டம்பர் 2023

## நடப்பு நிகழ்வுகள்

| | |
|---|---|
| இந்தியாவின் கடல்சார் பல்லுயிர் குறித்து மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம் **(CMFRI)** மேற்கொண்ட ஆராய்ச்சி ஐ.நா. கூட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்டது | செய்தி<br>• இந்தியாவின் கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்பு குறித்த ICAR-மத்திய கடல்சார் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் (CMFRI) ஆராய்ச்சி முடிவுகள் ஐ.நா. கூட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்டன.<br>• உலகளாவிய உயிரியல் பன்முகத்தன்மை கட்டமைப்பை விவாதிக்க ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டம் தென் கொரியாவின் சியோலில் நடைபெற்றது.<br>முக்கிய குறிப்புகள்:<br>• கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்புகளை குறிப்பாக சதுப்பு நிலங்கள் மற்றும் பவளப்பாறைகளை பாதுகாப்பதற்கும், கடல்சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகளை அடையாளம் காண்பதற்கும், நீடித்த கடல்சார் மீன்பிடித்தலை ஊக்குவிப்பதற்கும் இந்தியா தனது தனது நிலையான உறுதிப்பாட்டை வலியுறுத்தியது.<br>• ஐ.நா.யின் உயிரியல் பன்முகத்தன்மை மாநாட்டின் குன்மிங்-மாண்ட்ரீல் குளோபல் பல்லுயிர் கட்டமைப்பை (KMGBF) விரைவாக நடைமுறைப்படுத்துவதை நோக்கமாக கொண்ட இந்தியா நீடித்த பெருங்கடல் முன்முயற்சி (SOI) குறித்து கருத்தரங்கம் நடத்த வலியுறுத்தியது.<br>• கடல் சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக, நீருக்கடியில் உள்ள பவளப்பாறைகளின் படங்களை வகைப்படுத்தவதற்காக , ஆழ்ந்த கற்றல்-செயல்படுத்தப்பட்ட பட அங்கீகார மாதிரி |

| | |
|---|---|
| | ஒன்றை உருவாக்க வேண்டும் என மத்திய கடல்சார் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் (CMFRI) இன் ஆராய்ச்சியை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது .<br><br>• மேலும் இந்த அறிக்கை வட இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள நீர்வாழ் இனங்களின் பரவலை வரைபடமாக்க மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்தும் குறிப்பிட்டுள்ளது..<br><br>உங்களுக்கு தெரியுமா?<br><br>• கடல் மற்றும் கடலோர பல்லுயிர் தொடர்பான இலக்குகள் மற்றும் உலகளாவிய இலக்குகளை அடைவதற்கான திறனை மேம்படுத்துதல் மற்றும் கூட்டணிகள் உருவாக்க விரும்பும் தளமாக நீடித்த பெருங்கடல் முன்முயற்சி (SOI) உள்ளது. |
| குன்மிங்-மாண்ட்ரீல் குளோபல் பல்லுயிர் கட்டமைப்பு(**KMGBF**) | முக்கிய குறிப்புகள்:<br><br>• 2022 டிசம்பர் மாதம் நடந்த , பல்லுயிர் பாதுகாப்பு மாநாட்டின் 15 வது கூட்டத்தில்(COP 15) உயிரி பன்முகத்தன்மை இழப்பை நிறுத்துவதற்கும், அதனை மீட்டெடுப்பதற்கும், இயற்கையை மீட்டெடுக்கும் பாதையில் கொண்டு செல்வதற்கும் மற்றும் 2050-க்குள் மக்கள் இயற்கையுடன் இணக்கமாக வாழ்வதை உறுதி செய்வதற்கும் ஒரு வரலாற்று ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>• உயிரியல் பன்முகத்தன்மை கட்டமைப்பில்(GBF) 4 முடிவு சார்ந்த இலக்குகள் மற்றும் 23 செயலை சார்ந்த இலக்குகள் உள்ளன. அவற்றில் பெரும்பாலான இலக்குகள் கடலுக்கு மிக பொருத்தமாக உள்ளன. |
| மரபணு பொறியியல் கொசு கட்டுப்பாட்டை மேம்படுத்துகிறது | உங்களுக்கு தெரியுமா?<br><br>• பல கொசு இனங்களின் முழு மரபணு வரிசைகளை விஞ்ஞானிகள் பெற்றுள்ளனர் .இதன்மூலம் அவற்றின் மரபணு ரீதியாக மாற்றவும் வழி கண்டுள்ளனர்<br><br>• இந்தியா, பிரேசில் மற்றும் பனாமா நாடுகளில் வெளி சோதனைகள் நடத்த மரபணு இயக்கி தொழில்நுட்பம் |

<table>
<tr><td></td><td>பயன்படுத்தப்பட்டது.<br><br>முக்கிய குறிப்புகள்:<br><ul><li>கொசுக்களின் மரபணு மாற்றத்தின் அடிப்படை திட்டம் அவற்றின் இனப்பெருக்கத்தில் தலையிடுவதன் மூலம் அவற்றின் எண்ணிக்கையை முறையாகக் கட்டுப்படுத்துவதாகும்.</li><li>உலகெங்கிலும் உள்ள விஞ்ஞானிகள் பல்வேறு மரபணு மாற்று முறை தொழில்நுட்பங்களை கண்டுபிடித்து உள்ளனர் . இந்த கண்டுபிடிப்புகளில் முக்கியமானது மரபணு இயக்கி தொழில்நுட்பம் ஆகும்.</li></ul>மரபணு இயக்கி தொழில்நுட்பம்<br><ul><li>லண்டன் இம்பீரியல் கல்லூரியின் பேராசிரியர் ஆஸ்டின் பர்த், 2003-ல் ராயல் சொசைட்டி புரோசீடிங்ஸ் வெளியிட்ட ஒரு கட்டுரையில் இந்த தொழில்நுட்பத்தை பற்றிக் குறிப்பிட்டார்.</li><li>2020 ஆம் ஆண்டில் புளோரிடா மற்றும் டெக்சாஸில் உள்ள மாவட்டங்களில் OX5034 எனப்படும் மரபணு மாற்றப்பட்ட கொசுவை கண்டறிந்தனர்</li><li>மரபணு மாற்றப்பட்ட ஆண் OX5034 கொசுக்கள் பெண் கொசுக்களுடன் இனச்சேர்க்கை செய்யப்பட்டன ஆனால் ஆண் கொசுக்களின் சுய-கட்டுப்படுத்தும் மரபணு பெண் கொசுக்களின் இனத்தை உயிர் வாழ விடாமல் தடுத்தது.</li><li>ஆண் கொசுக்கள் பன்னிரண்டு தலைமுறைகளுக்குப் பிறகு சூழலில் இருந்து மறைந்துவிடும்.</li></ul></td></tr>
<tr><td>கொசுக்களால் பரவும் நோய்கள்</td><td>மலேரியா, டெங்கு/டெங்கு ரத்தக்கசிவு காய்ச்சல் (DHF), யானை கால் நோய் (Elephantiasis), கருங் காய்ச்சல் (VL), ஜப்பானிய மூளைக்காய்ச்சல் (JE) மற்றும் சிக்குன்குனியா.</td></tr>
<tr><td>ஜிக்னேஷ் ராவல்</td><td>முக்கிய குறிப்புகள்:<br><ul><li>ஜிக்னேஷ் ராவல் நாட்டின் சிறந்த டென்னிஸ்</li></ul></td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
பயிற்சியாளர்களில் ஒருவர் ஆவார்.

- இரண்டு தேசிய மகளிர் சாம்பியன்களாக ஜீல் தேசாய் மற்றும் வைதேகி சவுத்ரி ஆகியோர் அகமதாபாத்தில் உள்ள அவரது பயிற்சி கூடாரத்தில் இருந்து வந்தவர்கள்.

- ஜிக்னேஷ் நிறைய வீரர்களின் திறமையை மேம்படுத்துவதில் நன்கு அனுபவம் பெற்றவர்.

உங்களுக்கு தெரியுமா?

- நாட்டின் சிறந்த டென்னிஸ் பயிற்சியாளர்களில் ஒருவரான ஜிக்னேஷ் ராவல், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் கனடாவில் பலனளிக்கும் தன் வாழ்க்கையை கைவிட்டு வீட்டிற்கு திரும்புவதைத் தேர்ந்தெடுத்தார்; அவர் அனுபவத்தை வைத்து இந்தியாவில் ஒரு டென்னிஸ் அமைப்பை அமைக்க எண்ணினார் .
</td>
</tr>
<tr>
<td>
இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா மிகப்பெரிய பொருளாதார வழித்தடம்


</td>
<td>
செய்தியில்:

- இந்தியா - மத்திய கிழக்கு - ஐரோப்பா பொருளாதார வழித்தடம் முன்முயற்சியை பெய்ஜிங் வரவேற்றது. ஆனால் அதுவே புவிசார் அரசியல் கருவியாக மாறக் கூடாது என்று .பெய்ஜிங் தெரிவித்து உள்ளது .

இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா மெகா பொருளாதார வழித்தடம்

- மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பாவுடன் இந்தியாவை இணைக்கும் வகையில் ரயில் மற்றும் கப்பல் வழித்தடத்தை அமைக்கும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

- இந்தத் திட்டம் பொருளாதார வளர்ச்சி மற்றும் அரசியல் ஒத்துழைப்பை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது வர்த்தகத்தை அதிகரிக்கவும், எரிசக்தி வளங்களை கொண்டு செல்லவும் மற்றும் டிஜிட்டல் இணைப்பை மேம்படுத்தவும் உதவும்.

- ரயில் மற்றும் கப்பல் வழித்தடமானது உலகளாவிய
</td>
</tr>
</table>

| | |
|---|---|
| | உள்கட்டமைப்பு மற்றும் முதலீட்டுக்கான கூட்டாண்மையின்<br>• (PGII) ஒரு பகுதியாகும்.<br>• உலகளாவிய உள்கட்டமைப்பு முதலீடு கூட்டாண்மை (PGII) என்பது வளரும் நாடுகளில் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி அளிப்பதற்காக G7 நாடுகளின் கூட்டு முயற்சியாகும்..<br>• கண்டங்கள் மற்றும் நாகரிகங்களுக்கு இடையேயான பசுமை மற்றும் டிஜிட்டல் பாலம் என்றும் இத்திட்டம் அழைக்கப்படுகிறது. |
| சச்சின் டெண்டுல்கரை பின்னுக்கு தள்ளினார் டேவிட் வார்னர்<br> | செய்தி<br>• சர்வதேச கிரிக்கெட்டில் அதிக சதங்கள் அடித்த தொடக்க வீரராக ஆஸ்திரேலிய பேட்ஸ்மேன் டேவிட் வார்னர் இந்திய பேட்ஸ்மேன் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடித்தார்<br>• .சர்வதேச கிரிக்கெட்டில் அதிக சதங்கள் அடித்த தொடக்க வீரர் என்னும் சாதனையை படைத்தார் .<br>• 36 வயதான வார்னர் தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் தனது 46வது சதத்தை அடித்ததன் மூலம் இந்த சாதனை படைத்தார் . |
| **2014** ஆண்டுக்கு முந்தைய வழக்குகளை விசாரிக்க சிபிஐக்கு அனுமதி தேவையில்லை: உச்சநீதிமன்றம் | செய்தி<br>மத்திய புலனாய்வுப் பிரிவு (CBI) மூத்த அரசு அதிகாரிகள் மீதான ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்காக முன் அனுமதி பெற வேண்டும் என்ற சட்ட விதிமுறை செல்லாதது என்று 2014-ல் வழங்கிய உச்ச நீதிமன்ற தீர்ப்பை அரசியலமைப்பு அமர்வு தள்ளுபடி செய்துள்ளது.<br>முக்கிய குறிப்புகள்:<br>• நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு சிபிஐயை நிர்வகிக்கும் சட்டம் டெல்லி சிறப்புக் காவல் நிர்வாக (DSPE) சட்ட பிரிவு 6A, 2003ம் ஆண்டில் செப்டம்பர் 11 அன்று சேர்க்கப்பட்ட நாளிலிருந்தே செல்லாது என்று கூறியது. |

| | |
|---|---|
| | • 106 பக்க கொண்ட  தீர்ப்பில் பிரிவு 6A  சட்டம் அரசியலமைப்பின் மூன்றாம் பகுதியை (அடிப்படை உரிமைகள்) மீறுவதால் அரசியலமைப்பிற்கு முரணானது என்று அறிவித்துள்ளது.<br>• அதாவது உச்ச நீதிமன்றம் வழங்கிய  தீர்ப்பின் தேதிக்கு முன்பே ஊழல் வழக்குகளில் ஈடுபட்டுள்ள மூத்த அரசு அதிகாரிகள் விசாரிக்க அனுமதி தேவை இல்லை என்பது இதன் அர்த்தமாகும் . |
| இந்திய பிரதமர்  மேற்கு ஆசிய பொருளாதார வழித்தடத்தை தொடங்குவது ஒரு வரலாற்று நடவடிக்கை என கூறியுள்ளார் .<br> | செய்தி<br>• சவூதி அரேபியாவின் இளவரசர் முகமது பின் சல்மான் இந்தியாவிற்கு  வருகை<br>முக்கிய குறிப்புகள்:<br>• மேற்குக் கடற்கரை சுத்திகரிப்புத் திட்டத்தை விரைவுபடுத்த பணிக்குழுவை ஒன்றினை  அமைக்க இரு தலைவர்களும் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.<br>• பொருளாதார வளர்ச்சி, எரிசக்தித் துறை மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவற்றை அதிகரிக்க இந்த வழித்தடம் உதவும்.<br>•  சவுதி அரேபியாவை நன்கு  யுக்திகளை   தெரிந்து வைத்துள்ள நண்பன்  என்று இந்திய பிரதமர்  வர்ணித்தார். |

பதிப்புரிமை © ***Adda247***
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியையும் *Adda247* இன் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கவோ, மீட்டெடுக்கும் அமைப்பில் சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மின்னணு, இயந்திர, புகைப்பட நகல், பதிவு செய்தல் அல்லது வேறுவிதமாக அனுப்பக்கூடாது.